In the Court of the Principal District and Sessions Judge, Dindigul

| | |
|---|---|
| IDOP.No.96/2025 | Deposition of Witness: PW.1 |
| Name: Gnanaprakasam | Calling: |
| Father Name: | Religion: |
| Village: | Caste: |
| Taluk: | Age: |

Solemnly affirmed in accordance with the provisions of Indian Evidence Act X of 1873 on the day of 26.11.2025.

முதல் விசாரணை பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதை படித்துப்பார்த்து கையெழுத்து செய்தேன்.

01.12.2021 ம் தேதியிட்ட திருமண அழைப்பிதழ் அசல் மதசாஆ.1

02.10.2025 ம் தேதியிட்ட திருமணம் குறித்த ஆலய குறிப்பு சான்றிட்ட நகல் மதசாஆ.2

திருமண புகைப்படம் நகல் மதசாஆ.3

அமெரிக்காவில் Bon Secours Short Emergency Center ல் மருத்துவ சிகிச்சை எடுத்துக்கொண்டதற்கான ஆவணம் நகல் மதசாஆ.4 (எதிர்மனுதாரர் தரப்பு ஆட்சேபனையுடன்)

அமெரிக்காவில் Green Card பெறுவதற்கு விண்ணப்பித்த மற்றும் அது சம்மந்தமான Mail Messages நகல் மதசாஆ.5 (எதிர்மனுதாரர் தரப்பு ஆட்சேபனையுடன்)

மனுப்படி உத்தரவாக பிரார்த்திக்கிறேன்.

எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :-

எதிர்மனுதாரர் விவாகரத்து கோரி 2023 ல் மனு தாக்கல் செய்து 2.1/2 வருடம் கழித்துதான் நான் சேர்ந்து வாழவேண்டுமென இம்மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி காலதாமதத்திற்கான காரணத்தை மனுவில் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். 2023 ம் வருடம் ஏப்ரல் மாதம் கடைசியில் நான் இந்தியா வந்தேன் என்றால் சரிதான். விசா முடிந்ததால்

வந்துவிட்டேன். 2022ம் வருடம் டிசம்பர் மாதம் இந்தியா வருவதாக இருந்தது ஏன் வரவில்லை என்றால் ஆகஸ்ட் மாதம் 8ம் தேதி கிரின் கார்டு அப்ளை செய்திருந்தேன். வழக்கமாக அது 9 மாதங்களில் அப்ரூவல் ஆகிவிடும். ஆனால் எனக்கு அந்த அப்ரூவல் கிடைப்பதற்கு 1.1/2 வருடமானது. அதனால் என்னுடைய விசாவை நீட்டிப்பு செய்யமுடியவில்லை. 2022ம் வருடம் 8வது மாதம் எதிர்மனுதாரர் எனக்கு அனுப்பிய மெயில் என்னிடம் காண்பிக்கப்படுவது என்றால் சரிதான். அந்த மெயில் எமசாஆ.1. எமசாஆ.1ல் கண்ட வாசகங்கள் எதிர்மனுதாரர் கோபத்துடன் அனுப்பிய வாசகங்களாக இருக்கிறது என்றால் இல்லை. என்னிடம் காண்பிக்கப்படும் மெயில் எதிர்மனுதாரருக்கு நான் அனுப்பியதுதான். அது எமசாஆ.2. நான் தாக்கல் செய்துள்ள மனுவில் என்ன காரணத்திற்காக எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழவேண்டுமென சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. எதிர்மனுதாரர் என் மனைவி என்பதால் நான் அவருடன் சேர்ந்து வாழவேண்டும். என்னுடைய மனுவில் எந்த இடத்திலேயேவாது எதிர்மனுதாரருடன் அன்பாகவும் பாசமாகவும் நான் இருந்து வந்ததாக சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அப்படி எதுவும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. மனுவில் நான் சொல்லியுள்ள மரியராஜ் எனக்கு மாமா முறைவேண்டும். அவர் எனக்கு தூரத்து சொந்தம். அவர்களை வைத்து நடந்த பேச்சுவார்த்தையில் எதிர்மனுதாரர் என்னுடன் சேர்ந்து வாழ வாய்ப்பில்லை என்று சொல்லிவிட்டார் என்றும் அதை அவர்களும் என்னிடம் சொல்லிவிட்டார் என்றால் சரிதான். 18.07.2022ம் வருடம் ஜூலை மாதத்தில் எதிர்மனுதாரர் மருத்துவ பரிசோதனை செய்ததற்கு நான் எந்தவித தொகையும் அனுப்பவில்லை என்றால் வீட்டில் பணம் இருந்தது. நானும் அனுப்பி வைத்துள்ளேன். எந்த ஒரு பணமும் அன்றாட தேவைக்காகக்கூட அனுப்பவில்லை என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் நான் வாட்ஸ்அப் சாட் செய்த சமயத்தில் எதிர்மனுதாரரை என்னுடன் வீட்டிற்கு காவல் நாயாகத்தான் வைத்துள்ளேன் என்று அனுப்பினேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வாட்ஸ்அப் மெசேஜ் நாங்கள் இருவரும் அனுப்பியதுதான் என்றால்

சரிதான். அந்த மெசேஜ் எமசாஆ.3. எமசாஆ.3 ல் பொண்ணை கொடுத்தவங்க நோய் வந்தவங்களை கொடுப்பாங்களா என்று கேட்டுள்ளேன் என்றால் சரிதான். எனக்கும் எதிர்மனுதாரருக்கும் கருத்துவேறுபாடு ஏற்பட்டு இருந்த காலகட்டத்தில் நான் அனுப்பிய இ–மெயிலில் என் வீட்டுக்கு வரக்கூடாது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எமசாஆ.2 ல் கடந்த 09.09.2022 ம் தேதி நான் அனுப்பிய இ–மெயிலில் இனிமேல் வீட்டில் கல்வைத்தால் தலையிருக்காது என அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான். எதிர்மனுதாரர் என் மாமியார் அவரது தாய்மாமன் எல்லோரும் சேர்ந்து கெட்ட கெட்ட வார்த்தைகளால் என் பெற்றோர்களை பேசி ரோட்டில் வைத்து அவமானப்படுத்தியதாகவும், அந்த விவரத்தை என் அண்ணன் எனக்கு தெரியப் படுத்தியதால் நான் மேற்படி மெயிலை எதிர்மனுதாரருக்கு அனுப்பி வைத்தேன். ஊர் நாட்டாண்மையிடம் எனது மாமியார் விபச்சாரி மகனுக்கு பெண்ணை கொடுத்துவிட்டோம் அதனால் என் மகளை வாழவிடமாட்டேன் எனச் சொல்லியுள்ளார். மேற்கண்ட சங்கதிகளை எல்லாம் என் மனுவில் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிர்மனுதாரர் மீது நான் வீனாக பழி சுமத்துகிறேன் அதனால்தான் நடக்காத சங்கதிகளை நடந்ததாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

எதிர்மனுதாரர் வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதன்பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2025.11.26 15:18:43 +0530

Principal District Judge,
Dindigul.